செ.வெ.எண் : 13/நவம்பர் நாள்: 12.11.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## கனிமவளம் பாதுகாப்பு தொடர்பான கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கும் பணிகளுக்கு தகுதியான நபர்கள்/நிறுவனத்தார் விண்ணப்பிக்கலாம்.

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

தமிழ்நாடு அரசு, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற ஆணையின்படி சட்டவிரோதமாக கனிமங்களைக் கொண்டு செல்வதைத் தடுக்கும் விதமாக மாநில மற்றும் மாவட்ட எல்லைகளில் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள விருப்பமுள்ள தகுதியான நபர்கள்/நிறுவனத்தார், CCTV, Modem, Monitor Dedicated Line, Cable and Wires மற்றும் இதர பாகங்கள் ஆகியவற்றின் தொழில்நுட்ப விபரங்கள் மற்றும் விலைப்பட்டியல் தயார் செய்து 16.11.2020-க்குள் உதவி இயக்குனர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், இராமநாதபுரம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**